Register as a N
paper eylon
P. M. G. No. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஸ்தாபிதம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ௫௫] யாழ்ப்பாணம்:—சுபானு௵ புரட்டாதி௴ ௧௪௳ (1943 செப்டம்பர் 30 வியாழக்கிழமை) [இல. ௪௧

## வசாவிளானில் நேர்ந்த அநர்த்தம்

### "பொலிஸ்" காவல்

சென்ற வெள்ளிக்கிழமை (24-9-43) இரவு வசாவிளான் என்னுங் கிராமத்தில் பலவீடுகள் தீக்கிரையானமை முதலாம் அநர்த்தங்களைப்பற்றிய விசாரணை வரலாற்றையும் அறிக்கையையும் தமக்கு அனுப்பி வைக்கும்படி உண்ணாட்டு மந்திரியாகிய திரு. அரு. மகாதேவா அவர்கள் இம்மாகாணத் தலைவருக்குத் தெரிவித்திருக்கின்றார், குறித்த அநர்த்தம் காரணமாக கஷ்டமடைந்தவர்கட்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்பதே இதன் நோக்கமாம். மேலும் அவ்விடத்திற்குரிய பொலிசாருடன் கொழும்பிலிருந்து இதற்கென வந்த 10 பொலிஸார் மேற்படி கிராமத்தை இப்பொழுது காவல்செய்து வருகின்றனர், குறித்த அநர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டமும் சேதமும் அடைந்தவர்களுக்கு உடனுக்குடன் ஆகவேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டுமென்றும் மாகாணத்தலைவருக்கு திரு. மகாதேவா தெரிவித்திருக்கின்றார். சொல்லப்பட்ட வேலைக்காரர் குறித்த கிராமத்திற் பொருள் பண்டம் வாங்கும்படி அங்குள்ள கடைகளில் வந்து நடமாடா வண்ணந் தடுத்தற்பொருட்டு, அவ்வேலைக்காரர் வசிக்குந் தானத்திலேயே, அவர்களுக்கெனக் கடையும் சிறு சந்தையும் அதிகாரிகள் பொறுப்பில் இப்பொழுது அமைக்கப்படலாயின. இந்த அநர்த்தம் நேர்ந்தமைக்குக் காரணமின்னதென்பதையும், இதனால் நஷ்டமடைந்தோருக்கு ஈடு கொடுப்பதற்குத் தாம் அநுசரிக்க உத்தேசித்திருக்கும் வழிகளையும் திரு. மகாதேவா அவர்கள் மந்திரி சபையாருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

### வசாவிளானில் நேர்ந்த அநர்த்தத்தைப் பற்றிய சில விபரங்கள்

சின்னக்குட்டி செல்லத்துரை என்பவர் ஆபத்தான நிலையிலிருந்து இப்போது சொஸ்தமாகி வருகிறார், இறந்தது கந்தன் முத்தன்: சின்னக்குட்டி செல்லத்துரை இறக்கவில்லை. தீப்பற்றியெரிந்த வீடுகள் 33; கடைகள் 5; சேதமுற்றவை 2. கஷ்டப்பட்டவர்களுக்கு பின்வரும் விகிதப்படி அரசினரால் பண உதவி செய்யப்படுகின்றது.

ஆண் ரூபா-10; பெண் ரூபா 7½; பிள்ளை ரூபா 5; நேற்றைய தினம் (29-9-43) மல்லாகத்தில் 140 தொழிலாளர்கள்வரை விளக்கத்துக்குச் சென்றனர். சென்ற திங்கட்கிழமை பொலிஸ் நீதிபதி முன்னும் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் முன்னும் இக்கலகத்திற் பங்குபற்றியவர்களை அவ்வூரில் காயப்பட்டவர்களால், காண்பிக்கப்பட்டது. அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் எறிகளால் சில ஓடுகள் சேதமடைந்தன. 4-ந் திகதி வரைக்கும் பாடசாலை மூடப்பட்டிருக்குமென அறியலாகின்றது.

### பண்டிதர் க. கி. நடராஜன்

இப்பத்திரிகையின் துணையாசிரியராகிய திரு. க. கி. நடராசனவர்கள், சென்ற மே மாதம் நடைபெற்ற யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டித பரீஷையிற் பூரண சித்தியடைந்துள்ளனரென்பதையிட்டு மகிழ்ச்சியுறுகின்றோம்.

### விபுலானந்த அடிகள் வரவேற்பு

திரு. எ. நடேசபிள்ளை, B. A. B. L. M. S. C. அவர்கள் தலைமையின் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் புரட்டாதித் திங்கள் 10 ம் நாள் (2-10-43) சனிக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் நடைபெறுமென அறியலானோம்.

### வட இலங்கை ஒம்னி பஸ் தொழிலாளர் சங்கம்

இச்சங்கக்கூட்டம் இந்த 1943-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை இரவு 10 மணியளவில் வண்ணை பாரதிபாஷீப வித்தியாசாலை மண்டபத்தில் நியாயதுரந்தரர் P. இரகுபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் ஸ்ரீ V. சிற்றம்பலம், நியாயதுரந்தரர் யாழ்ப்பாணம், உபதலைவர்கள் திரு. S. கந்தையா காரைநகர், திரு S. நாகலிங்கம்சுண்ணாகம், காரியதரிசி திருக. ஆ. சுப்பிரமணியம் வட்டுக்கோட்டை. —கடித.

## வயல்களுக்கு நேர்ந்த விதி

### செய்கை பண்ணத் தவறினால் அதிகாரிகளுக்கு வயல்

இலங்கைத் தீவிலுள்ள வயல் காணிச் சொந்தக்காரர் போகந்தோறும் தவறாது பயிரிடுதல் வேண்டுமென்பது யுத்த பாதுகாப்புப் பிரமாணங்களி லொன்றாக இப்பொழுது அரசினர் 'கஸெற்' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அந்தஅந்தப்பகுதியிலுள்ள தக்க அதிகார உத்தியோகத்தர் உரிய போகத்திற் செய்யத் தவறினால், அச் சொந்தக்காரரிடமிருந்து வயல்களைத் தாங்கள் பிடித்துப் பயிரிடுதலாகும். இடத்திற்குத் தக்கபடி இன்னின்ன கால எல்லையுள் வயல் பயிரிடப்படல் வேண்டுமென்பது வயலுடையார்க்குத் தெரிவிக்கப்படும்; சொல்லப்பட்ட தவணைக்குட் சொந்தக்காரன் ஒரு வயலைப் பயிரிடத் தவறினால், அந்த வயலைத் தாம் பிடித்துச் செய்கை பண்ணுவதற்கு அதிகாரிக்கு அதிகாரமுண்டு; ஆனால் அதற்கிடையில், சொந்தக்காரன் வயலிற் பயிரிடாமல் விட்டதற்குக் காரணங் காட்டும்படி கேட்கப்படலாம், வயலுடையான் காட்டுங் காரணம் தக்கதெனக் கண்டால், அவன் ஒரு குறிக்கப்பட்ட தவணையுள் முறைப்படி தன் வயலைச் செய்வதற்கு ஒப்புக்கொண்டால் அதிகாரிகள் அவனுடைய வயலைத் தாங்கள் பிடித்துப் பயிரிடாது விடுதலாகும்.

இனி, அதிகாரிகள் செய்கை பண்ணப்படாத வயலைப் பிடித்துத் தாங்கள் தங்களுக்கு இஷ்டமானவர்கள் மூலம் பயிரிடுவிக்கும் குறித்த போக காலத்தில், அவ்வயலின் பொருட்டுக் குறித்த செய்கை பண்ணப்படும் எந்த வயலையாக நெல்லடிக்கப்படும் சூடு மிதிக்கப்படும் எந்த இடத்தையாக, நெல் சேமித்து வைக்கப்படும் பத்தாயத்தையாகப் போய்ச் சோதித்துப் பார்ப்பதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு. இங்கே அதிகாரிகளென்றது மாகாணத் தலைவர்; மாகாண உபதலைவர், இவர்களால் அதிகாரம் கொடுக்கப்பட்ட பிரதியுத்தியோகத்தரென்னுமிவர்களைக் குறிக்கும்.

### நவராத்திரிப் பூசை

நிகழும் சுபானு வருஷம் புரட்டாதி மாதம் 14-ந் தேதி (30-9-43) வியாழக்கிழமை வட்டுக்கோட்டைத் தச்ச தெருப் பாடசாலையில் நவராத்திரிபூசை ஆரம்பமாகும். ஒவ்வொரு நாளும் காலை, மாலைகளில் தேவிக்குப் பூசை நடைபெறும். 22-ந் தேதி (8-10-43) வெள்ளிக்கிழமை விஜயதசமியி லன்று சரஸ்வதி தேவிக்கு விசேடபூசை நடைபெற்று, வீதி வலம் கொண்டு வரப்படும். அதன்பின் விபூதி சந்தனம் குங்குமம் முதலியன வழங்கப்படும். அதன்பின் ஏடு துவக்கல் நடைபெறும். 11-10-43 பாடசாலை ஆரம்பமாகும்.

### வதிரித் தேவரையாளிச் சைவ வித்தியாசாலை

#### பெற்றோர் தினக் கொண்டாட்டம்

நிகழும் சுபானு ௵ ஆவணி மாதம் ௧௧-ந் திகதி (16-9:43) வியாழக்கிழமை பிற்பகல் 5மணிக்கு மேற்படி கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. வடமராட்சிப் பகுதி வித்தியாதரிசி திரு. K. S. இராசசிங்கம் அவர்கள் தலைமை வகித்தனர். முதலிலே சுகாதாரச் சித்திரப் பொருட்காட்சியைப் பெற்றோர் முதலியோர் பார்வையிட்டு மகிழ்ந்தனர். பின்பு மாணவர் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அப்பால் மாணவரின் புனைவுப் பிரசங்கம், சங்கீதம், தேவார பாராயணம், A. R. P. நடிப்பு, கும்மியடித்தல், நடனம், கமத்தொழிலின் பெருமையை விளக்கும் ஒரு சிறு நாடகம் என்பவை நடைபெற்றன. இடையிடையே புலோலி M. M. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. G. M. ஆழ்வாப்பிள்ளை அவர்களாலும் பருத்தித்துறைச் சுகாதார பரிசோதகர் திரு. பொ. நடேசன் அவர்களாலும் முறையே 'பெற்றோரும் ஆசிரியரும்' 'கிராமச் சுகாதாரம்' என்னும் விஷயங்கள் தகுந்த முறையில் கிரமமாய் நகைச்சுவையுடன் சிறப்புறப் பேசப்பட்டன. கரவெட்டி A. R. P. தலைமை 'வார்டன்' திரு. சி. மக்கசன் அவர்களாலும், தலைவர் அவர்களாலும் குறிப்புரைகள் கூறப்பட்டன. ஈற்றில் மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் அவர்களின் நன்றியுரையுடன் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது. —கடித

## ஹெர் ஹெஸ்ஸைப்பற்றிய விஷயம்

### கொம்மன்ஸ்சபையில் மிஸ்டர். அந்தோனிஈடன் கூறினர்

லண்டன், செப் 22

அந்நியநாட்டு மந்திரி மிஸ்டர். அந்தோனி ஈடன் இன்று கொமன்ஸ் சபையில் ஹெர். ருடால்ப் ஹெஸ்ஸைப்பற்றிப் பின்வரும் விஷயங்களை வெளியிட்டார்.

1941ம் ஆண்டு மேமாசம் 10ந் திகதி ஒரு ஜெர்மன் விமானத்திலிருந்து ஹெர்.ஹெஸ் பாரசூட்மூலம் பிரிட்டனில் வந்திறங்கினர். ஜெர்மன் விமானப்படையின் கப்டன்களுக்குரிய உடைகளை அவர் அணிந்திருந்தார். தாம் ஒரு விசேஷ தூதராக வந்திருப்பதாகவும், ஹமில்டன் பிரபுவைத் தாம் காண வேண்டுமென்றும் ஹெஸ் பொலிஸாரிடம் தெரிவித்தார். சில புகைப் படங்களும் ஒருசில "விஸிற்றிங்" கார்டுகளுந்தான் அவரிடம் இருந்தன. கைதியை பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளக் கூடிய எவ்வித பத்திரங்களும் அவரிடங் காணப் படவில்லை.

மே௴ 11ந் திகதி ஹமில்டன் பிரபு கைதியைக்கண்டு சம்பாஷித்தார். 1936ம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுகள் பேர்லினில் நடைபெற்றபோது ஹமில்டன் பிரபு கைதியின் வீட்டில் விருந்துண்டதாகக் கைதி ஹமில்டன் பிரபுவிடந் தெரிவித்து விட்டு, "நான் தான் ருடால்ப் ஹெஸ்" என்று கூறினர். தாம் எப்போதும் ஹெஸ்ஸைக் கண்டதில்லையென்றும் அவர் கூறிய விஷயங்கள் தமக்கு ஞாபகமில்லையென்றும் ஹமில்டன் பிரபு கைதியிடம் தெரிவித்தார்.

### "இங்கிலாந்தைத் தாக்க எண்ணமில்லை"

ஹமில்டன் பிரபுவிடம் கைதி மேலும் பின்வருமாறு தெரிவித்தார்:—"மனித சமூகத்தின் ஒருதூதனாக நான் இங்கு வந்திருக்கிறேன். இங்கிலாந்தைத் தோற்கடிக்க ஹிட்லர் விரும்பவில்லை. யுத்தத்தை நிறுத்த அவர் விரும்புகிறார்."

ஹமில்டன் பிரபுவைச் சந்திக்க அவர் பலமுறை இங்கிலாந்துக்கு வர முயன்றதாகவும் ஆயின், சந்தர்ப்பங்கள் இடங்கொடுக்கவில்லையென்றும் கைதி ஹமில்டன் பிரபுவிடந் தெரிவித்தார்.

சமாதானத்தில் ஜெர்மனிக்குள்ள ஆவலைத் தமது விஜயத்திலிருந்து அறியலாமென்றும் கைதி தெரிவித்தார். இன்றல்லாவிடில், என்றாவது ஒருநாள் ஜெர்மனி வெல்வது நிச்சயமென்றும், அநாவசியமாக இரத்தஞ் சிந்துவதைத் தாம் தவிர்க்க விரும்புவதாகவும், கைதி மேலும் வற்புறுத்தினர். ஹமில்டன் பிரபுவின் கட்சியிடம் அவருடைய செல்வாக்கை உபயோகித்துத் தமது தூதை வெற்றியடையச் செய்ய வேண்டுமென்றும் அவர் ஹமில்டன் பிரபுவிடங் கேட்டுக் கொண்டார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஹு
புரட்டாதிமீ கசஉ வியாழக்கிழமை

## மகளிரின் மானத்தைப் பாதுகாத்தல் வேண்டும்

இப்பொழுது இவ்விலங்கையின் பாதுகாப்பை யுத்தேசித்து இங்கு வந்து நிற்கும் சக்கராதிபத்தியத்திற்குரிய சைநியத்திற் சிலரினும் சிலர் குறித்த கிராமங்களுட் புகுந்து செய்த சில பிழைகளையிட்டு, சென்றவாரங் கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் நடந்த விவாதத்தையும் நிறைவேற்றிய நிர்ணயத்தையும், சுருக்கி மொழிபெயர்த்துச் சென்ற திங்கட்கிழமை வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்தில் வெளியிட்டுள்ளோம்; முன் எக்காலத்தாயினும் நடந்திராத பாரிய உலக யுத்தம் நடக்கும் இக்காலத்தில் நாம் எதிர்பார்த்திராத சில அநர்த்தங்கள் நடத்தலுங் கூடும். உலகம் பலவிதம் என்றபடி, ஒரு நாட்டினரால் கைக்கொள்ளப்படும் பழக்க வழக்கங்கள் இன்னொரு நாட்டினரால் கைக்கொள்ளப்படாது விலக்கப்படுதலும், ஒரு நாட்டினரால் பிழையெனக் கொள்ளப்படாதது பிறிதொரு நாட்டினரால் பிழையெனக் கொள்ளப்படுதலும் அந்த அந்த நாட்டில் வசிக்கும் மக்களின் சாதிசமயக் கட்டுப்பாடு கொள்கை, ஒழுக்கம், தொன்மையென்னுமிவைகளைப் பொறுத்தனவாகும். போர்வீரரில் இரண்டொருவர் விளைத்த அநர்த்தமென, களனிப் பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்றர். ஜயவர்த்தன அன்று அரசாங்கசபையில் எடுத்துக் காட்டிய தவறுகள் பெருந் தவறுகளேயென்பதை இந்நாட்டு மக்களெல்லாரும் ஒத்துக்கொள்வர். இப்படியான தவறுகள் நேர்ந்தால், இவைகளை இனியாயினும் நேரவொட்டாது தடுத்தல் இங்குள்ள தேசாதிபதி, பிரதான படைத்தலைவர் முதலியோருடைய கடனென்பதும், இத்தவறுகளை உடனுக்குடன் எடுத்துக்காட்டி மேலே சொல்லப்பட்ட அதிகாரிகட்குத் தெருட்டுதல் இலங்கை அரசாங்கசபையிலுள்ள மந்திரிமார் பிரதிநிதிகளென்னுமிவர்களுடைய கடனென்பதும், அன்று அரசாங்கசபைக் கூட்டத்தில் நிகழ்ந்த விவாதத்தைக்கொண்டு எவரும் நன்கு விளங்கக் கடக்கின்றனர்.

எந்தத் தீமையையும் அது நேருமுன் காப்பது உத்தமம்; நேருங்காற் காப்பது மத்திமம்; நேர்ந்தபின் காப்பது அதமம்; நேர்ந்துவிடத்துங் காவாதொழிவது அதமத்திலதமம் என்று பெரியோர் சொல்வர். இப்படியான அநர்த்தங்களை உடனுக்குடன் தடுக்காதொழிந்தால் ஊரிற்பெருங் கேடுங் கலகமும் விளைதலுங் கூடும்.

இனிமேலும் இவ்வாறான அநர்த்தம் ஏதும் நேராவண்ணம் பாதுகாத்தற்குச் செய்ய வேண்டிய கைக்கொள்ள வேண்டிய செயல்கள் முறைகள் என்னவென்பதே யோசிக்கவேண்டியது. யுத்தப்பகுதி மேலதிகாரிகளாயுள்ளார்கள் போர்வீரரையாக, படைப்பகுதித் தானங்களில் நின்று தொழில் செய்வோரையாக, இயன்றவரையில் தங்கள் எல்லையைவிட்டு, தானத்தைவிட்டு; தக்க காரணமின்றி வெளியே செல்லவிடவொண்ணுது; அப்படித்தான் புறத்தே செல்ல நேர்ந்தாலும் அவர்களுக்குரிய மேலதிகாரிகளுடைய கட்டுக்காவலுடன் மேற்பார்வையிற் செல்லவிட வேண்டும்; எங்கள் அரச சக்கரவர்த்தியின் விசுவாசமான பிரசைகளின் ஆருயிரையும் மானத்தையும் பொருளையும் பாதுகாப்பதே அச்சைநியத்தவருடைய கடமையென்பதை மேலதிகாரிகள் அவர்களுக்கு நன்கு தெருட்டிவிடல் வேண்டும்.

'மாநிலங் காவலனாவான்
மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரா லுயிர் தம்மால்
ஆனபயமைந்துந் தீர்த்
தறங்காப்பானல்லனோ"

என்பதே இந்நாட்டு மக்கள் தொன்றுதொட்டு அரசனைப் பற்றிக் கொண்டுள்ள மேலான கொள்கை; இக்காலத்து மக்களும் அந்தப்பழைய கொள்கையுடனேயே இருக்கிறார்கள். சனங்களுட் கூடிய தொகையினர் அரசியன்முறையையும் யுத்தகாலத்தில் தாங்கள் அநுசரித்து நடக்கவேண்டிய விதிகளையும் பெரும்பான்மையும் அறியாதவர்களாயிருத்தலினால், இங்குள்ள சனத்தலைவர்கள் பிரதிநிதிகள் விஷயமறிந்தோரென்றிருப்பவர்கள் காலந்தோறும் சனங்களுக்கு அவைகளை எடுத்துச்சொல்லி விளக்குதல் வேண்டும். இங்கு வந்துள்ள படைவீரரும் பரிவாரத்தினரும், பகைவரால் இந்நாட்டு மக்களுக்கு எவ்வகையான தீமையும் வாராமல் தடுத்துக் காப்பதற்கு வந்துள்ளனரென்பதை இந்நாட்டு மக்கள் எந்நேரமும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். படைப்பகுதியார் ஊரவர்களென்னுமிருபாலாரும் ஒருவரையொருவர் உள்ளபடி விளங்கக் கொண்டால் இப்படிப்பட்ட அநர்த்தங்கள் வருதல் அரிது.

மேலும் அன்று நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்ட விவாதத்தில் பிரதம காரியதரிசியாகவுள்ளவர் போர்வீரர்களானவர்கையிலுள்ள துப்பாக்கியைக் குண்டுபிரயோகஞ் செய்யாத நிலைமையில் ஆக்கிவிட்டால் அப்போர்வீரர் இப்படியான அநர்த்தங்களைச் செய்யமாட்டார்களென்றகருத்துப்படக் கூறியிருக்கிறார்; போர்வீரர் எந்நேரமும் யுத்த சந்நத்தினராய் நிற்றல் வேண்டுமென்பதே எமக்குங் கொள்கையாகும்; அவர்கள் ஊரின்கணானே கொலைசெய்யும் நோக்கமாகத் திரிவதில்லை; அவர்கள் கொண்டநோக்கத்திற்கு இப்படியான துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் தேவையில்லையெனலாம்.

இனி, போர்வீரரையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் ஆசைவார்த்தை சொல்லி அனுப்பி இந்நாட்டின் நிலைமையையறியாத அப்போர் வீரரிடம் பணம் பறிக்கும் 'நாட்டுவேடர்' என்று சொல்லத்தக்க சில தூர்த்தர்கள் காரணமாகவே போர்வீரர்க்கும் ஊரவர்கட்குமிடையே நிற்கில சந்தர்ப்பத்திற் பிணக்கும் வெறுப்பும் கலகமும் உண்டாகின்றன; ஆதலால் இவைகளுக்கெல்லாம் மூலகாரணராயுள்ள இத்தத் தூர்த்தர்களைப் பிரதானமாக அரசினர் அறிந்து அகப்படுத்தி விசாரணை செய்து தண்டிக்குள் ஆக்கல் வேண்டும்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

## விடு வந்த பிள்ளையை அவமதித்ததுபோலாம்.

சங்கேதப்படி, சொக்கலிங்கமும் காஞ்சனமாலையும் தங்கள் இரதத்தில் ஏறிக்கொண்டு சின்னம்மாள் வீட்டிற்குச் சென்றார்கள். அந்தச் சமையத்தில் தங்கள் தலைவாசலில் நின்ற கந்தசுவாமி சொக்கலிங்கத்தை வரவேற்று ஒரு நாற்காலியில் இருக்கச்செய்ய, புவனேசுவரி காஞ்சனமாலையை இன்சொற் கூறி வீட்டினுள் அழைத்துச் சென்றிருந்தினள். "அம்மா, தங்கைச்சியின் தமயனாரும் வந்து தலைவாசலில் இருக்கிறார்" என்று புவனம் நாணந் தலைப்படத் தன் தாயிடஞ் சொன்னாள். தாயும் தலைவாசற் கதவண்டை வந்து ஒதுங்கி நின்று சொக்கலிங்கத்தைச் சுகம் விசாரித்தாள். அவனும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விநயமாகப் பதில்சொன்னான். புறத்தே சென்றிருந்த குமாரசுவாமியும் அந்தச் சமையத்தில் மீண்டுவந்து சொக்கலிங்கம் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சிகொண்டு உபசாரவார்த்தைகள்கூறிச்சேஷமம் விசாரித்து அவனுடன் அளவளாய்ப் பேசிக்கொண்டிருந்தான். தமயன் வந்து பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்த கந்தசுவாமி மெல்ல அவ்விடம்விட் டெழுந்து புவனேசுவரி இருந்த இடத்திற்குச் செல்ல, புவனமும் காஞ்சனமும் அடுக்களையிலிருந்து ஏதோ சிற்றுண்டி தேநீர் ஆயத்தஞ் செய்வதைக் கண்டு, அங்குப் போகாது மீண்டு தாய் நிற்குமிடத்திற்கு வந்தான். வந்தவன் தாயைப் பார்த்து "அம்மா, அவரை உள்ளேயழைத்து உபசரிக்க வேண்டுமல்லவா" என்று சொல்லுதலும் தாய் "ஓம், மகனே" என்று சொல்லிவிட்டு அடுக்களைப் பக்கஞ் சென்றாள். தாயைக்கண்ட மகள் "அம்மா, இங்கே எல்லாம் ஆயத்தம், நீங்கள் எடுத்துக்கொண்டு போய், அறையுள் வைத்துவிட்டு அண்ணாவைக் கொண்டு அவரை உள்ளே அழைத்து இருத்தி இவைகளைப் பரிமாறலாமே" என்று அன்பும்நாணமும் உள்ளத்தில் மாறி மாறி நிகழக் கிளியெனமொழிந்தாள்; மகள் மொழியைக் கேட்ட மாதாவானவள் மனத்திற் கவலையும் முகத்தில் வாட்டமும் அடைந்தாளாய்த் தன் மகளைப் பார்த்து "மகளே, அந்தப் பிள்ளைக்கு உணவு பரிமாற எனக்கு ஒருதடையுமில்லை; ஆனால்நானொரு கைம்பெண்; மங்கலமாக என் வீட்டிற்கு வரக்கூடிய பிள்ளைக்கு நான் அமங்கல முதன்முதற் சிற்றுண்டி வழங்குவது முறையல்லவென்று பின்னிற்கிறேன்; உன் அக்காளும் இங்கே இல்லை; இந்தத் தங்கைச்சி காஞ்சனமும் என பின்னைதான்; ஆனாலும் எங்கள் வீட்டில் வந்த பிள்ளைக்கு அந்தப்பிள்ளையின் தங்கை மூலமாக ஏதும் பரிமாறுவிப்பது, வந்தபிள்ளையை அவமதிப்பது போலாகும்; ஆதலினால் என் கண்ணே, அதனால் ஒரு குறையுமில்லை, தங்கைச்சிகாஞ்சனத்துடன் கூடிக்கொண்டுபோய் நின்று நீயே இப்பண்டங்களைப் பரிமாறு" என்று இதமாகச் சொன்னாள்; அதைக் கேட்ட காஞ்சனமும் சந்தோஷமடைந்தவளாய் "ஆம், ஆம், ஆச்சி, அப்படிச் செய்வதுதான் முறை; இன்றைக்குநல்லநாளொன்றுபாரோ சொல்லக்கேட்டேன்" என்று புன்னகையரும்பச் சொன்னாள். அன்னை சொன்ன வார்த்தையைக் கேட்ட புவனேசுவரி, "நடுக்குற்றாள், பயந்தாள், முகத்திற் குறுவியர்வை யுண்டாக, மேனி புளகங் கொள்ள, நெஞ்சம் படபடக்க, நிலத்தைப் பார்த்தபடி நின்று "அம்மா, இந்த ஒன்றையும் என்னைச் செய்யச்சொல்லிக் கேளாதீர்கள்; என்மேற் குறைபெண்ணாதீர்கள்; வேணுமானால் நான் இவைகளை எடுத்துக்கொண்டு தங்கைச்சியின் பிறகே போகிறேன்; அங்கே நான் கொடுக்கத் தங்கைச்சி வாங்கி அவருக்குப் பரிமாறட்டும்" என்று சொல்லித் தாயை இரந்தாள்; தாய் பதிலொன்றும் பேசாமல் நிற்க, காஞ்சனம் "ஆச்சி, ஓம், அக்கா அப்படியே செய்யலாம், நான் அக்காவுடன் போகிறேன்" என்றாள். காஞ்சனம் முன்னே செல்லப் புவனேசுவரி பதார்த்தங்களை ஏந்தியபடி, பூ உதிர்ந்தாற் போல் மெல்ல மெல்ல அடி வைத்துப் பின்னே நடந்தாள்; அறையிலிருந்து குமாரசுவாமியும் சொக்கலிங்கமும் பேசிக்கொண்டிருக்கும்போது, முன்னே சென்ற காஞ்சனமாலை தன் தமையனுக்குச் சமீபமாகப் போய்நின்றுகொண்டு "இந்த மேசையில் இப்படியே வையுங்கள் அக்கா" என்று புன்சிரிப்புடன் சொல்ல, பாவம்! புவனேசுவரி மனம்பதற, கைநடுங்க, சொக்கலிங்கத்தின்முன்பு தான் கொண்டுசென்ற பதார்த்தங்களை வைத்துவிட்டுத் தன் தமயன் பக்கலில் தலைகுனிந்தபடி நின்றாள்; "தங்கைச்சி, உவைகளை அவருக்கும் எனக்கும் எடுத்துப் பரிமாறு" என்று குமாரசுவாமி சொல்ல, புவனம் அப்படியே கூசிக் கூசிப் பரிமாறினாள்.

## "பெண்ணுக்கணிகலம் நாணுடைமை"

புவனேசுவரி சொக்கலிங்கன்மீது எல்லையற்ற அன்பு பூண்டிருந்தனளேனும், அவனையே தனக்கு நாயகனென்று உள்ளத்தில் வரித்திருந்தனளேனும், அவ்வுத்தமகன்னிகையிடத்தில் இயல்பாகவே குடிகொண்டிருந்த நாணம்முதலாம நாற்குணங்களும் அந்தச் சமயத்தில் அவளைப் பெரிதும் பற்றித்து நின்றன. "கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்

கொழும்பு — அருள் தியாகராஜா.

பழம்பதியென்ற ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளால் புகழப்பட்ட பாண்டி நாட்டிலுள்ள தண் பொருநை நதியின் வடகரையில் ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கும் திருப்பதியொன்றுளது. அதற்கு வடபாலில் ஸ்ரீ கைலாசம் என்ற ஓர் இடம் உண்டு. அங்கே பாண்டி வேளாளர் குலத்திலே, பெரும் புகழும், நல்லொழுக்கமும், தமிழ்ப்புலமையும் வாய்ந்த சண்முக சிகாமணிக் கவிராயரென்ற ஒருவர், தம் அருந்ததிக் கற்புடை வாழ்க்கைத் துணைவியாகிய சிவகாமசுந்தரியம்மையாரோடு, இல்லறமென்னும் நல்லறத்தைச் செவ்வனே நடாத்தி வந்தார். இப்படியிருக்குங் காலத்தில் இவர்களுக்குப் புத்திரப்பேறின்மையால் பெரிதும் வருந்தி தமது குலதெய்வமாகிய திருச்செந்தூர் முருகப்பெருமானை நினைந்து அருந்தவம் போற்றினர். திருச்செந்தூரின் பெருமை பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு முதலிய சங்க நூல்களிலும் கூறப்பட்டுளது. கருணை திருவுருவாய்க் காசினியில் உதித்த செந்தில் முன்னவன் திருவருளால் இவர்களுக்கு நல்லதோராண்மகவு தித்தது.

தவமென்னும் வித்தினின்றும் தோன்றியஇப்பிள்ளையை மட்டற்ற மனமகிழ்ச்சியுடன், பெற்றோர்களிருவரும், தாலாட்டிச் சீராட்டி மிக்க பேரன்புடன் வளர்த்து வருவாராயினர்கள். இப்பிள்ளையானது ஐந்தாண்டு வரையிற் பேசாதிருந்தமையால், குழலினும் யாழினுமினிய மழலைச் சொற்களைக் கேட்க முடியவில்லையேயென்று அன்னை தந்தையர்கள் உள்ளங்குழைந்து மறுகினர்கள். பின்பு அவர்கள் இப்பிள்ளைக் கலியைத் தீர்த்த முருகப்பெருமானே, இக்குறையையுமகற்றியருள வல்லனென்று துணிந்து, இப்பிள்ளையை யெடுத்து திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் விடுத்து, இப்பிள்ளை இன்னும் நாற்பது நாட்களுட் பேசாவிட்டால் தாமும் அந்நாற்பதாம் நாள் இறுதியில் உயிர்விடுவதென்று நிச்சயித்துக்கொண்டு அன்னாகாரமின்றி அங்கே வரங்கிடந்தார்கள். இவ் வண்ணம் 39 நாட்கள் கழிந்தும் அப்பிள்ளை பேசவில்லை; நாற்பதாநாள் வந்தது. அன்று அப்பிள்ளை பேசாவிடில் நிச்சயம் தாங்கள் அன்றிரவே தமதுயிரை விடும் நோக்கத்துடன் தாய்தந்தையர்கள் தம்முள் உறுதி செய்துகொண்டிருந்தார்கள். அன்று பாதி இரவிலே, அடியார்களுடைய குறைகளை நீக்கியருளுவதே தமக்கு விரதமாகக் கொண்ட ஸ்ரீ முருகப்பெருமான் அப்பிள்ளையை நோக்கிக் 'குமரகுருபர' என்றழைத்தார். அப்பிள்ளையானது உடனே பேசத்தொடங்கிச் சைவசித்தாந்த சாரத்தைத் தன்னுள்ளடக்கிய "கந்தர் கலிவெண்பா" என்று கூறப்படும் ஓர் திவ்வியப் பிரபந்தநூலை அப் பெருமான்மேற் பாடிற்று. பின்பு மெய்ச்சோர்வினாலும் மன அயர்ச்சியினாலும் உறங்கிக்கொண்டிருக்கும் தாய்தந்தையரை எழுப்பி "அம்மே! அப்பா!" என்று ஆதரவு பெருக அழைத்தது, அப் பிள்ளையின் குதலைமொழியைக் கேட்ட பெற்றோர், பரவசமடைந்து, ஆனந்த வெள்ளத்தின் மூழ்கி, முருகப்பெருமானுடைய கருணைப்பெருக்கை நினைந்து நெக்கு நெக்குருகினார்கள்.

பின்பு இவர், பெற்றோருடன் மதுரைக்குச்சென்று, தம்மூரிலெழுந்தருளியுள்ள ஸ்ரீ கைலாசநாதர் மீது கைலைக்கலம்பகம் என்னும் ஓர் பிரபந்தம் இயற்றினர். முருகன் திருவருளால், இலக்கிய இலக்கணங்களையும் ஞான சாத்திரங்களையும் இவர் விரைவிற் கற்றுத் தேர்ந்தார். அப்பால் இராமேசுவரம், திருக்குற்றாலம், குறும்பலா, பெருந்துறை, பூவணம், திருப்பரங்குன்றம் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை என்புருக மனமுருகி வழிபட்டார். பின்பு மதுரைக்குச் சென்று, முதலில் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, அப்பால் அருள்சூல் கொண்ட அங்கயற்கண்ணம்மையாரையும், மீனாட்சி சுந்தரேசுவரரையும் ஆராத காதலுடன் வணங்கி அத் திருப்பதியின் கண் சில நாள் தங்கினர். அப்போது ஸ்ரீ மீனாட்சியம்மையின்மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடி, அக்காலத்தில் மதுரையை அரசாண்ட திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினர். அரங்கேற்றும்போது உலகமாதாவான அம்பிகையானவள் சிறுபிள்ளைக் கோலத்துடன் திருமலைநாயக்கரின் மடியிலிருந்தனளென்றும், மற்றும் இவர் வருகைப் பருவத்திலுள்ள "தொடுக்குங் கடவுட் பழம்பாடற்றொடையின் பயனே! நறை பழுத்த துறைத் தீந்தமிழினொழுகு நறுஞ்சுவையே!....என்ற பாட்டைப் பாடிக்கொண்டே வரும்பொழுது அம்மையானவள், அரசன் கழுத்திலிருந்த முத்தாரத்தை எடுத்து இவர் கழுத்திலணிந்து விட்டு மறைந்தனளென்றும் ஆன்றோர் கூறுவர். இதனைக் கண்ணுற்ற அரசர் மனமகிழ்ந்து இவருக்குப் பலவகையான சன்மானங்களை அளித்து வழிபட்டார். குமரகுருபர சுவாமிகள் அவ்வரசன் கட்டளைப்படி சிலகாலம் அங்கே தங்கி, திருக்குறளின் சாரமென்று கூறப்படும் 'நீதிநெறிவிளக்கம்' என்னும் நூலை நூற்றிரண்டு செய்யுட்களால் ஆக்கிக் கொடுத்ததற்காக அரசன் அவருக்கு இருபதினாயிரம் பொன்பெறுமதியுள்ள அரிய ஊரை பரிசளித்தானென்றுங் கூறுப. இதன் காப்புச் செய்யுளாகிய "நீர்க்குமிழி இளமை நிறைசெல்வம் நீர்ச் சுருட்டும் நெடுந்திரைகள்.... ....மன்று" என்னுஞ் செய்யுளானது, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலியவற்றை வற்புறுத்தி, இறைவன் திருவடியை எஞ்ஞான்றும் யாமெல்லோரும் வழிபடவேண்டுமென்று கூறுகின்றது. இந்த நூலானது நாற்பது வருஷங்களுக்கு முன்பே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பல மேனாட்டறிஞர்களாற் போற்றப்பட்டு வருகின்றது. 'மதுரைக் கலம்பகம்' என்னும் பிரபந்தநூலையும் அங்கிருக்கும்போதே இயற்றினர்.

பிறகு சோழநாட்டு ஸ்தலங்களைத் தரிசிக்கத் தொடங்கிக் காவிரியின் தென்பாலுள்ள திருவாரூருக்குச் சென்றார். அங்கே 'பாதம் சிவக்கப் பைந்தமிழ் வேண்டிப் பரவை தன்பால் நடந்தன்று' சென்ற ஸ்ரீ தியாகராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்துகொண்டு அங்குச் சில காலம் இருந்தனர். அப்பொழுது திருவாரூர் நான்மணி மாலையென்ற பிரபந்தத்தை இயற்றியருளினர். இவர் சிவஞான வுபதேசம் பெற வேண்டுமென்ற உள்ளிறைந்த விருப்பினால் ஓர் ஞானாசிரியரைத் தேடப் புறப்பட்டார். அக்காலத்தில் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4-ம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீ மாசிலாமணித் தேசிகர் சிவஞானச் செல்வராக இருப்பதை அறிந்து அவரிடம் சென்றார். அங்கே உண்டான சில குறிப்புக்களால் (நூற்பேரறிவுங் கண்களே கொள்ள......) இவரே ஞானாசிரியர் என உணர்ந்து தேறினர். அப்பால் தமக்குத் துறவுநிலையருள வேண்டுமென்று அத்தேசிகரைக் குமரகுருபர சுவாமிகள் வேண்டி நின்றனர். (இன்றும் தருமபுர ஆதீன கர்த்தாக்கள், கல்வி, யறிவொழுக்கம் ஒருங்கமையப்பெற்ற பெரியார்களைக் கொண்டு சைவப்பிரசங்கங்களைச் செய்வித்தும், சைவசமய நூல்களையும், சித்தாந்த நூல்களையும் அச்சிடுவித்தும் சமயத்தை விருத்தி செய்து வருகிறார்கள்) அத்தேசிகரவர்கள் அங்ஙனம் செய்தற்கு முன் காசியாத்திரை செய்து வரும்படி கட்டளையிட்டனர். காசிக்குச்சென்றுவருதல் நெடுங்காலஞ் செல்லுமெனக் குமரகுருபரர் கவன்றமையால், அவரைச் சிதம்பரவாசமேனும் சில காலம் செய்துவரும்படி கட்டளையிட்டனர்.

குமரகுருபரர் ஞானாசிரியர் கட்டளையைச் சிரமேற்றாங்கிச் சிதம்பரம் செல்லப் புறப்பட்டு, இடையிலே திருப்புள்ளிருக்கும் வேளூரில் வீற்றிருந்தருளும் பவரோக வைத்தியநாதப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு, அங்கே கோயில்கொண்டருளியிருக்கும் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பேரில் இனிய பிள்ளைத்தமிழொன்றை இயற்றினர். பின்பு எப்புவனங்களும் நிறைந்த சிதம்பர க்ஷேத்திரத்தையடைந்து, எங்குள உயிரும் இன்ப நிறைந்தாடும் வண்ணம் ஆநந்தத் திருநடனஞ் செய்தருளும் நடேசப் பெருமானின் பூவார்ந்த பொன்னடிகளை அன்புடன் பரவி இறைஞ்சினர். அப்பொழுது "சிதம்பர மும்மணிக்கோவை" யெனனும் பிரபந்தத்தை அப்பெருமான்மீது பாடியருளினர். செந்தமிழறிவும் சிவநேயமும் வாய்க்கப்பெற்ற சில அன்பர்கள் "யாப்பருங் கலக் காரிகையிற் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் பெரும்பாலும் ஜைனசமயச் சார்புடையனவாக விருத்தலின் அந்நூலின் இலக்கணங்களுக்கு உதாரணமாக ஸ்ரீ நடராஜப் பெருமான் விஷயமான செய்யுட்களை இயற்றித் தரவேண்டும்" என்று, பிரார்த்திக்க இவர் அங்ஙனமே 'சிதம்பர செய்யுட்கோவை' என்னும் பிரபந்தத்தை இயற்றி அளித்தார்.

இங்ஙனம் சிதம்பரத்தில் வாழ்ந்து வந்த குமரகுருபரர் மீண்டு ஞானதேசிகரை அடைந்து தமது கருத்தை விண்ணப்பஞ் செய்தனர். இவருடைய பரிபக்குவ நிலையையறிந்தஞான தேசிகர் இவருக்குக் கஷாயம் உதவினர். அன்றுமுதல் இவர் குமரகுருபர முனிவரென வழங்கப் பெறுவாராயினர். அப்பொழுது இவர் தமது ஞானதேசிகர் மீது 'பண்டார மும்மணிக் கோவை' யென்ற சிறந்த பிரபந்தமொன்றை இயற்றியருளினர்; இப் பிரபந்தம் மிக்க இன்சுவை வாய்ந்தது: இது குமரகுருபரருக்கு மாசிலாமணி ஞானசம்பந்தர்மீது உள்ள பக்திப்பிரவாகத்தைக் காட்டும். அப்பால் தமது ஞானதேசிகரிடம் விடைபெற்றுக் கொண்டு காசிக்குச் சென்று தமது கல்வித் திறத்தினாலும், முருகன் திருவருளாலும் டில்லி பாதுஷாவின் உளத்தைக் கவர்ந்தார். அப்பாதுஷாவின் தாய்மொழியாகிய ஹிந்துஸ்தானியை விரைவில் அறிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தினால் கலைமகள்மீது 'சகலகலாவல்லிமாலை' யென்னும் பிரபந்தமொன்றை அருளிச்செய்தார். கலைமகள் கடாக்ஷத்தினால் அம்மொழியிலே சிறந்த அறிவுபெற்று பாதுஷாவினிடம் பேசிப்பழகினர். அவர் இவர்பால் ஈடுபட்டு இவருடைய விருப்பத்தின்படியே காசியில் இருத்தற்குரிய மடம் அமைப்பதற்குக் கேதாரகட்டத்தில் இடம் உதவினர். இவர் அங்கே குமாரசுவாமி மடமொன்றை ஸ்தாபித்து சிவயோகஞ்செய்து வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் காசித்துண்டி விநாயகர் பதிகமும், காசிக்கலம்பகமும் இவரால் இயற்றப்பட்டன. (டில்லி பாதுஷா என்பவர், அக்காலத்தில் பெரும்புகழும், காருண்யமும், எல்லாச்சமயங்களை ஒப்பநோக்கும் மனப்பான்மையும் வாய்ந்த மொகலாயச் சக்கரவர்த்தியாச அக்பர் (Akbar the Great) என்று சிலர் இப்பொழுது கூறுவர்.

முனிவர் அவருடைய சபையிலே சைவசமயத்தைப்பற்றி அரிய பிரசங்கங்கள் நிகழ்த்தினர். அப்பொழுது இதனைக்கண்டு அழுக்காறு கொண்ட சில மதமதியர்கள் சைவசமயம் உண்மையானதல்லவென்று மறுத்தார்கள். குமரகுருபரர் சிங்கத்தின் மீதிவர்ந்தும் பழுக்கக்காய்ச்சிய இரும்பைக் கையாலெடுத்துக் காட்டியும் சைவசமயத்தின் உண்மைகளை நிறுவினரென்ப. ஆனால் இவருடைய காலத்தில் சைவசமயமானது குமரிமுதல் இமயம்வரை பரவியிருந்தது உண்மையேயாம்.

இவர் தாம் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராணசாலையொன்று ஏற்படுத்தி, அங்கே ஹிந்துஸ்தானி பாஷையிலும் தமிழிலும் புராணப் பிரசங்கங்கள் செய்து வந்தனர். சில சமயங்களில் கம்பராமாயணப் பிரசங்கங்கள் செய்து வந்ததுமுண்டு. சிறந்த இராம பக்தராகிய துளஸீதாஸர் (Tulsidas) அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு உவந்தனரென்று, கம்பராமாயணத்திலுள்ள கருத்துக்களைத் தாம் இந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக் கொண்டனரென்றும் கூறுவர். குமரகுருபரர் தருமபுரத்திற்கு மீண்டுமொருமுறை வந்து ஞானாசிரியரைத் தரிசித்துவிட்டு, பின்னும் காசிக்கே சென்று வாழ்ந்து விளங்கியிருந்து, ஒரு வைகாசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷத் திருதிகையிலே சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்தனர்.

ஸ்ரீ குமரகுருபர முனிவருடைய செய்யுட்கள் மிக்க இன்னோசை வாய்ந்தவைகள். கலியுக வரதரும் எனது ஆன்மநாயகரும் வேண்டியவற்றை வேண்டியாங்கு உதவ வல்லவருமாகிய ஸ்ரீ முருகப்பெருமான் திருவருளைப்பெற விரும்புவோர் இவர் அருளிச்செய்த 'கந்தர் கலிவெண்பாவையும்' 'முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழையும்' நியமமாகத் தவறாது பாராயணஞ் செய்தல் வேண்டும். இதுகண்கூடென்று கல்வியறிவொழுக்கம் வாய்ந்த பெரியோரிடத்தில் நேர்முகமாகவும், கடித வாயிலாகவும் கேட்டிருக்கின்றேன். சங்கீதத்தில் விருப்புடைய சிலர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை மிக்க இன்னிசையுடன் பாடக் கேட்டிருக்கின்றேன். முனிவர் சரஸ்வதி தேவியிடம் "பண்ணும் பரதமுங் கல்வியும், தீஞ்சொற் பனுவலும், சொல்விற்பனமு மவதானமுங் கவிசொல்லவல்ல நல்வித்தையையும்" இன்னும் பலவற்றையும் வேண்டினரென்று சகல கலாவல்லிமாலை யென்னும் நூலிலிருந்து தெரிகின்றது.

இவர், முருகப்பெருமான் சிவபிரானின் வேறல்லனென்பதைக் கந்தர்கலி வெண்பாவிற் பலவிடங்களில் இனிது தெரிவிக்கின்றார். தாமியற்றிய பிரபந்தங்களில் அவ்வத் தெய்வங்களை வைத்துப் பாராட்டும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பரீட்சைகள் 1943.

### சித்தியடைந்தோரின் பெயர் முதலியன.

### பண்டிதவகுப்பு 3-ம் பிரிவு தமிழ்ப்பரீட்சைகள்

இலக்கம். பரீக்ஷார்த்திகளின் பெயரும் விலாசமும்.

J 636 விநாயகமூர்த்தி சுவாமிநாதன், நடேசன் காவியபாடசாலை திருநெல்வேலி.
68 கதிரவேலு கிருஷ்ணபிள்ளை நடராஜன், கமலாசனி அச்சுநிலையம் வண்ணார்பண்ணை
69 வேதவனம் கந்தையா, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி
BT 2 விநாசித்தம்பி சின்னத்தம்பி கந்தையா, இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை, மண்டூர் மட்டக்களப்பு
3 கதிர்காமத்தம்பி சாந்திவாசகம், கோட்டைமுனைப் பாடசாலை மட்டக்களப்பு

ஆநசித்தி 3ம் பாடவகை

J 70 மாணிக்கவாசகர் இரத்தினம்மா C/o Mr. V. மாணிக்கவாசகர் கொக்குவில்

### பாலபண்டிதவகுப்பு(3ம்பிரிவு)

J 34 ஏகாம்பரநாதர் பரஞ்சோதி மீசாலைதெற்கு, சாவகச்சேரி
41 கந்தையா கணபதிப்பிள்ளை, வேலணைகிழக்கு
51 கந்தையா தருமலிங்கம், ஸ்ரீ கணேச வித்தியாசாலை புங்குடுதீவு
52 சதாசிவம் கயிலாயபிள்ளை 2ம்வட்டாரம்வேலணைகிழக்குவேலணை
CH 22 தம்பையா சுப்பிரமணியம், விளிசிட்டி தெல்லிப்பழை
PP 2 பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை, வழக்கறிஞர் உடுப்பிட்டி வல்வெட்டித்துறை
4 கார்த்திகேசு கந்தையா, தமிழகம், புலோலிதெற்கு பருத்துறை
13 கணபதி சினித்தம்பி, மாலோலை கரணவாய் வடக்கு
23 செல்லப்பா பரஞ்சோதி, தமிழகம் புலோலிதெற்கு பருத்துறை
24 கணபதிப்பிள்ளை சிவசங்கரம்,வழக்கறிஞர் வறத்தலை கரவெட்டி
26 சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், தமிழகம் புலோலிதெற்கு

ஆநசித்தி 4ம் பாடவகை

J 40 செல்லப்பா நாகலிங்கம், குண்டடி சுதுமலை மானிப்பாய்
50 கணபதிப்பிள்ளைகண்ணையா,ஸ்ரீகணேசவித்தியாசாலை புங்குடுதீவு
PP 8 கதிரவேலு வல்லிபுரம், வழக்கறிஞர் பருத்தித்துறை
BT 6 கந்தப்பன் விநாயகமூர்த்தி, கொச்சிமுனை காததான் குடி

### பிரவேசபண்டித வகுப்பு முதற்பிரிவு

J 7 சின்னத்தம்பி லக்ஷுமி, கல்வியங்காடு சைவவித்தியாசாலை
17 ஆறுமுகம் சதாசிவம், அராலிதெற்கு வட்டுக்கோட்டை

இரண்டாம் பிரிவு

J 19 சின்னத்தம்பி சரவணமுத்து T H. S. மிருசுவில்
24 A. செல்லையா ரேசம்மா, கோப்பாய் தெற்கு.

மூன்றாம் பிரிவு

6 செல்லையா தில்லைநாதன், கல்வியங்காடு சைவவித்தியாசாலை
18 நாகமுத்து செபஸ்தியாம்பிள்ளை அந்தோனி, செக். ஜோசெப் கொழும்புத்துறை
C H 2 வேலாயுதம் முருகையா C/O திரு. K சிவதாஸ், தெல்லிப்பழை இந்து மகாசபைக் காரியதரிசி
14 நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், குரும்பசிட்டி, தெல்லிப்பழை
P P 30 சந்திரசேகரம் ஆழ்வாப்பிள்ளை, கலாநிதி பிறெஸ்தெரு தும்பளை
31 முருகேசு வேலாயுதம்பிள்ளை பெரியபிரான் கோவிலடி தும்பளை
B T 17 குஞ்சித்தம்பி நாகமணி, அட்டாளைச்சேனை ஆசிரியர் தமிழ்ப் பாடசாலை, அக்கரைப்பற்று
21 வீரகுட்டி நாகமணி, அட்டாளைச்சேனை ஆசிரியர் தமிழ்ப் பாடசாலை, அக்கரைப்பற்று
C 7 S. தம்பர்தி பொன்னையா, திக்கத்தியா, கிட்டம்புவா

### பிரவேச பண்டித வகுப்பு; சம்ஸ்கிருத பரீக்ஷை

முதற்பிரிவு

C H 35 கௌரி மனோஹரி தியாகராஜா, நவாலி தெற்கு மானிப்பாய்

குறிப்பு:- J 17 ஆறுமுகம் சதாசிவம் என்னும் மாணவனுக்குப் பொதுஅறிவுத் திறமைக்காக ரூ. 15 பெறுமதியான புத்தகங்கள் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த திரு. இராமுப்பிள்ளையால வழங்கப்பட்டது. இலக்கணப் பரிசு ரூபா 10 வழக்கறிஞர் திரு. K. ஜயரத்துரையால் வழங்கப்பட்டது.

தமிழ்ப் பரீக்ஷைகள்

பண்டித பரீக்ஷையிற் பிரவேசித்தோர் 11 பேர்.
பாலபண்டித பரீக்ஷையிற் பிரவேசித்தோர் 66 பேர்.
பிரவேச பண்டித பரீக்ஷையிற் பிரவேசித்தோர் 56 பேர்.

சம்ஸ்கிருத பரீக்ஷை

பிரவேசபண்டித பரீக்ஷையிற் பிரவேசித்தோர் இருவர்.
தமிழ் சம்ஸ்கிருதமாகிய இரு பரீக்ஷைகளுக்கும் தோற்றுதற்காக விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பியோரின் தொகை 160.

H. S. பெரேரா,
வித்தியாதிகாரி, யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத் தலைவர்.

# மகிடாசுரசம்மாரம்

(வண்ணை: ஆசிரியர் க. வை. ஆத்மநாத சர்மா.)



முன்னொருகாலத்திற் செந்தாமரையாசனராகிய பிரமதேவருக்கும் காவற்கடவுளாகிய திருமாலுக்கும் தாம் தாமே பரப்பிரம மென்ற அகந்தைதனித்தனி உண்டாயிற்று. அதனால் இருவரும் மாறுபட்டுப் பெரும்போர் செய்யத் தொடங்கினர்.

பிரமதேவர் தமக்குரிய பேராற்றலினாலே எருமைத் தலையோடு கூடிய ஓர் அசுரனைச் சிருட்டித்தார். அவனை மகிடாசுரன் எனப்பட்டான். அவர் அவனைப்பார்த்து, "நீ நம்மோடு மாறுபட்ட விட்டுணுவை எதிர்த்துச் சென்று பொருது வெற்றி கொண்டுவா" எனவிடுக்க, அவன் அவ்வாறே சென்றனன்.

இதனைக்கண்ட திருமால், எவராலும் நினைக்கமுடியாத கொடுமைகளை யெல்லாஞ் செய்ய வல்லவனும் புலிமுகமுடையவனுமாக ஓரசுரன் தோன்றவேண்டுமென்று தம்மனத்தில் நினைத்தனர். உடனே பிறைபோல வக்கிரதந்தங்கள் விளங்கவும் கண்கள் கோபாக்கினி சிந்தவும் புலிமுகத்தவனொருவன் தோன்றினன். அவன் காவற்கடவுளின் கட்டளைப்படி பிரமனை எதிர்த்துச் சென்று பொருதான்.

தேவயுத்தமெனத் தொடங்கியது அசுரயுத்தமாக மாறியது. இரு அசுரத் தலைவர்களுடைய சேனைகள் செய்த பெருஞ் சமருக்காற்றாது தேவர்கள் ஓடியொளித்தார்கள். சகல லோகங்களும் திகைத்தன. உலகமே சீர்குலைந்தது. திருவிளையாடற்காரரான காவற் கடவுள் அந்த மகிடாசுரனோடு நிர்வகித்துச் சமர்புரிய ஆற்றலின்றி ஓடியொளித்தார். அவ்வாறே சிருட்டிகர்த்தாவும் புலிமுகனோடு பொர வன்மையற்று மறைந்தோடினர். பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களனைவரும் அவுணர்பரிடத்துக் கொண்ட அச்சமேலீட்டினால் தத்தம் பதவிகளையெல்லாமிழந்து, போக்குவேறற்றவர்களாய்த் திருக்கைலாய கிரியை யடைந்தனர். அவர்களனைவரும் அங்கிருந்துகொண்டு பார்வதிபதியாகிய பரமேசுவரனைப் பக்திபூர்வமாகப் பலகாலம் பூசித்து வருவாராயினர்.

இவ்வாறு பல்லாயிர வருடகாலங் கழிய, அத்தேவர்கள் கொண்ட அகந்தை குறைந்தது. அவர்கள் செய்த பூஜையைத் திருவுளத்துக் கொண்ட பரமபொருள் பார்வதி சமேதராய் இடபாரூடராய் அக்கடவுளர்களுக்குக் காட்சியளித்தனர். அவர்கள் விரைவாக எழுந்து மிகுந்த பக்தியோடு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி விநயத்தோடு நின்றனர்.

அப்பொழுது எம் பெருமுதல்வராகிய சிவபெருமான் அத்தேவர்களிடத்துக் கிருபா நோக்கஞ் செய்தருளி, "தேவிர்காள்! நுமக்கு நேர்ந்த இடுக்கண் யாது? பலகாலமாக துன்பங்களைத் தாங்கி இங்கு வந்து நம்மைப் பூசிக்கும் நோக்கம் யாதோ? அதனைக் கூறுவீர்களாக" என்று அடியார்போலத் திருவாய் மலர்ந்தருளினர். பிரம விஷ்ணுக்கள் சிவபெருமானது பாதார விந்தங்களை மீட்டும் வணங்கித் தாங்கள் அகந்தைகொண்டு மாறுபட்டது முதல் தங்களாற் சிருட்டிக்கப்பட்ட மகிடன் புலிமுகன் என்னும் இரு அசுரராலும் தாங்கள் மாத்திரமன்றிச் சகல உயிர்களும் வருந்துவதிருக ஒன்றும் விடாமற் கூறி அவ்விரு அசுரர்களையுஞ் சங்காரஞ் செய்து காத்தருளவேண்டும் என்று இரந்தனர்.

சர்வலோகைக நாயகராகிய சிவபெருமான் அப்பொழுது பூங்கொடி போல் வளராகிய இசுவரியிடத்துத் தமது திருவிழிகள் மூன்றையுஞ் செலுத்தியருளினர். அக்கணத்தில் அன்னை இறைவியின் திருமுகத்திலிருந்து இடியிடித்தாற்போல ஒரு தேவி பிரசன்னமாயினள். வலிமை பொருந்திய பலவான படைக்கலங்களை ஏந்திய பதினெட்டுத் திருக்கரங்கள், மூன்று திருவிழிகள், உக்கிரமான தோற்றம், இவற்றோடு கூடியவளாய்ச் சிவபெருமானைத் துதித்தபடி தோற்றினள். இவளே துர்க்கை எனப்படுபவள். அத்தேவி இறைவனை வணங்கி சுவாமி! அடியேனுக்கு யாது கட்டளை? திருவாய் மலர்ந்தருளுக வென்றனள். திருநீலகண்டராகிய சிவபெருமான் ஒரு வாட்படையை அத்தேவியிடம் கொடுத்து "தேவி! புலிமுகன் மகிடன், எனுமிரு அசுரர் முறையே அரிபிரமரால் படைக்கப்பட்டனர், அவ்வசுரர் இருவரும் மாறுபட்டுப் பிரம விட்டுணுக்களைத் தாக்கினர்; தேவர்கள் யாவரும் தத்தம பதவிகளை இழந்தனர், சகலவுயிர்களும் வருந்தலாயின. அவ்வசுரரை நீ சங்காரஞ் செய்து, இத்தேவர்களுக்குப் பழைய பதவிகளை அளிப்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினர். அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட துர்க்காதேவி யுத்த சந்நத்தையாயினள்.

போர்க்கோலங் கொண்ட தேவியின் கண்களினின்றுந் தீப்பொறிகள் பறந்தன. உலகம் அதிர்ந்தது. அண்டகோளங்களையும் பிளவுற்றது. புலிமுகாசுரன் எதிர்த்தான். மீண்டுமவன யுத்தஞ் செய்ய நினையாவண்ணம் ஓர்முறையிற் சங்கரித்தாள். பின்பு வளைந்த கொம்புகளையும் அக்கினி காலுங் கண்களையுமுடைய எருமைத்தலையோடு கூடிய மகிடாசுரன் பொருகளம் புகுந்தான். காளகூட விஷம் போலக் கொதித்தெழுந்த அவ்வசுரன் பெருங் கர்ச்சனை செய்தான். அதனால் நட்சத்திரங்கள் உதிர்ந்தன, அட்டதிசைகளும் மதிர்ந்தன. உலகங்கள் நிலைகுலைந்தன. பல காலமாகத் தேவியோடு பெரும்போர் புரிந்தான்.

துர்க்காதேவி அடங்காச் சீற்றங் கொண்டு தீயெழ விழித்து, வாயிதழை மடித்து, ஹுங்காரஞ் செய்து எம்பெருமான் கொடுத்த வாளை வீசி அவ்வசுரன் கொண்ட எருமைத் தலையைத் துண்டித்தருளினள். இரத்தவெள்ளம் பெருகத் துணித்து வீழ்ந்த அம்மகிடத்தலை அதி விரைவாக எழுந்து போரிடி போல முழங்கிப் பின்னும் போர் புரிய முயன்றது. அதுகண்ட துர்க்காதேவி முத்தலைச் சூலத்தை யெடுத்து எருமைத் தலையின் கொம்புகளினிடையே குத்தியருளினள். அச்சூலமானது எருமைத்தலையின் வலிமையைக் கெடுத்து அதனை இறைவியின் பாதத்தருகு கொண்டுவந்தது. தேவி அத்தலையைத் தமது திருவடிகளால் அமுக்கி மிதித்தருளி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காமுற்ற - பெண்ணுக் கணிகலம் நாணுடைமை" என்ற பிரகாரம் நாணந் தலைப்பட மயிலென ஒதுங்கி நின்ற புவனேசுவரியின் முகத்தைப் பார்க்கச் சொக்கலிங்கனுடைய உள்ளம் கூசியதெனினும், அவனுடைய கண்கள் அவ்வுள்ளத்தையறியாமலே அக்கன்னிகையின் மதியன்ன வதனத்தை ஒருமுறை பார்த்துவிட்டன. அன்றே அக்கன்னிகையின் பேரழகனைத்தையும் கண்ட சொக்கலிங்கன் அற்புதமடைந்தான்; அவள் நாணம்மீதூர ஒதுங்கி நின்ற நிலை அவனுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. "பேரழகுவாய்ந்த இப்பெண்ணரசி, பூரணவயசற்ற என்னிடத்தில் விசுவாசம் வைத்தாளே! இதுவும் விதியின் விபரீதம் போலும்; இவ்வுத்தமியைக் கல்யாணஞ்செய்து இனிது வாழலாமென நான் நினைப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டவாறாகும்; பூரண ஆயுட் செல்வம் பொருந்தாத எனக்கு இந்த வீண் எண்ணமெல்லாம் எதற்கு......." என்று பலவாறு நினைந்து நினைந்து சிந்தை சோர்ந்தான்; அவன் அச்சமயத்திற் போசனம் அருந்தினனேனும், "இன்னவுணவென்றறியேன், இன்னரசமென்றறியேன் கன்னிமேல் வைத்த காதலினால்" என்ற பிரகாரம், தான் அங்கேஉண்ட உணவின் சுவையைத்தானும் உணர்ந்தானல்லன். இதற்கிடையில், தன் சகோதரி அந்த இடத்தில் நிற்பதற்கு இலச்சைப்படுவதைக் குறிப்பாலுணர்ந்த தமையனாகிய குமாரசுவாமி "தங்கைச்சி, நீர் போம், ஆகவேண்டியவைகளைப் பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று புவனத்தைப்பார்த்துச் சொல்லுதலும், புவனம் அவ்விடத்தைவிட்டு மெல்லப் போய்விட, காஞ்சனம் அங்கே நின்று அவ்விருவருக்குந் தேநீர் முதலியன பரிமாறினாள்; அவர்களும் போசனம் முடித்துக்கொண்டு வாய் கை சுத்தி செய்து தலைவாசற் பக்கத்தில் வந்திருந்தார்கள்; காஞ்சனம் புவனேசுவரியோடு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தாள். சிறிதுநேரஞ் செல்ல, சொக்கலிங்கனுஞ் சகோதரியும் சின்னம்மாள் வீட்டிலுள்ளாரிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் இரதத்திலேறி வீடுசென்று சேர்ந்தனர்; போகும் மார்க்கத்தில் புவனத்தின் குணாதிசயங்களையெல்லாம் சொக்கலிங்கம் தன் தங்கைக்குச்சொல்லிப் பாராட்டினான்.

## "எங்கள்குடி ஈடேறியது"

வீட்டிற்கு மீண்டபின், சின்னம்மாள் வீட்டில் நடந்த உபசாரம் முதலிய கருமங்களையெல்லாம் காஞ்சனமாலை, தங்கள் தாய்கேட்க விபரமாகச் சொன்னாள்; சண்பகத்தம்மாள் மகனைப் பார்த்து "தம்பி, அந்தப்பெண்ணை நீ நேரிற் பார்த்தாயாமே, அப்பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்ள உனக்குச் சம்மதந்தானே" என அன்புடன் கேட்டாள். "அம்மா, அந்த உத்தமியை மணஞ் செய்துகொள்ள எனக்கு எப்பொழுதும் சம்மதந்தான்; ஆனால் என் ஆயுட் குறைவை யிட்டுத்தான் நான யோசிக்கிறேன்" என்றான் சொக்கலிங்கம். கேட்ட தாய் சிறிது மனக்கிலேசங் கொண்டாளாய்த் தன் பிள்ளையைப் பார்த்து "எங்களை ஈடேற்றவந்த குலமணியே, உனது ஆயுளுக்குப் பங்கம் வருமென்று பயந்து நீ உள்ளத்தையும் சஞ்சலப்படவேண்டாம்; உனக்கு அப்படி ஏதும் இடையூறு சேர அந்த ஆண்டவன் விடமாட்டான்; அப்படியேதும் நீங்கு வரவொண்ணாதென்ற பத்தி வைராக்கியத்தோடு புவனம் விரதங் கிடந்து அல்லும் பகலும் தெய்வத்தை வேண்டுகின்றாள்; நான் வேண்டுகின்றேன்; உங்கள் அப்பர் வேண்டுகின்றார்; உன் தங்கை பிரார்த்திக்கின்றாள்; சின்னம்மாள் வீட்டிலுள்ளாரெல்லாரும் நீ நலமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்; எங்கள் வேண்டுகோளுக்குத் தெய்வம் இரங்காமலிருக்க முடியாது; அல்லாமலும் மகனே, அந்தப் புவனேசுவரியெனிலோ உனக்கன்றி வேறெவருக்கேனும் மனைவியாதற்கு உடன்படமாட்டாளென்பது நிச்சயம்; அப்பர் சுவாமிகளுடைய தமக்கையாராகிய திலகவதியாரைப்போல், இந்த உத்தம கன்னிகையும், நீ தன்னை விவாகஞ் செய்தாலென்ன செய்யாதொழிந்தாலென்ன, நீயே தன் கணவனென்று மனத்தில் நிச்சயித்துக் கொண்டாள்; அவளுடைய பத்தி வைராக்கியத்தையும் நியதியையும் மாற்றத் தெய்வத்தினாலும் முடியாது; உனக்கு நல்லாங்கு போல் ஒரு பொல்லாங்கு வந்தாலும் கைம்மை நெறியையே கடைப்பிடித்தொழுகுவாள்; மேலும் கற்புடைய பெண் மனைவியாக வாய்க்கப்பெற்றால் அந்தக் கணவனுக்கு எவ்வகையான தீமையும் நேரமாட்டா; எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகும். கற்புடைய பெண் செயற்கருஞ் செயல்களையெல்லாம் செய்வள்; ஆடவரைக் காட்டிலும் கற்புடையமகளிர் சிறந்தவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது; மகனே, இந்த நாட்களில் நீங்கள் கந்தபுராணம் முதலிய அரிய தமிழ் நூல்களைப் படித்தலை விடுத்து வெறும் இங்கிலிசை மாத்திரம் படித்துக்கொண்டு இடர்ப்படுகின்றீர்களே; எங்கள் கந்தபுராணத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது,

"மேனவியல்பான் வரையும் மெல்லியலே மேவில்
தானமுளதாகும், அரிதான தவமாகும்,
வானமுளதாகும் இவண்மண்ணுமுள தாகும்
ஈனமிலதாகும், அரிதொன்றுமிலையன்றே"

மகனே, கற்புடைய பெண் பெய்யெனப் பெய்யுமாம் மழை; இம்மட்டோ, இல்லை, அவளுக்கும் அவள் கணவனுக்கும் அவள் பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் எவ்வகையான ஈனமும் நேரமாட்டாவாம்; அந்தப் பெண்ணுக்கு உலகத்திலே அரியதொன்றுமில்லையாம். இவை மாத்திரமா இன்னமுஞ் சொல்லுகிறேன், கேளடா என கண்ணே,

"காண்டகையதங் கணவரைக் கடவுளார் போல்
வேண்டலுறு கற்பினர்தம் மெய்யுரையில் நிற்கும்
ஈண்டையுள தெய்வதமும் மாமுகிலுமென்றால்
ஆண்டகைமையோர்களும் அவர்க்கு நிகரன்றே"

கற்பொழுக்கமுடைய பெண்கள் ஆடவரைக் காட்டிலும் சிறந்தவராவரென்பதை நான் உனக்குச் சற்று முன்பே எடுத்துச் சொன்னேன். மலைக்குத் தன்பெருமை தெரியாதென்பர்; அதுபோலப் பெண்களாகவுள்ள நாங்கள் இக்காலத்தில் எங்கள் பொறுப்பையறியாமல், கடமையை யுணராமல், எங்கள் மூதாட்டிகளின் கற்பு மகத்துவத்தை அறியாமல், உத்தம சந்ததியை விருத்திசெய்ய வந்த தாய்மாரென்று சிந்தியாமல், இல்லறம் இனிது நடத்தற்கு இன்றியமையாத் துணையென்பதை நினையாமல், சிவசக்தியின் அம்சம் என்பதை விளங்காமல், கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று நடக்கத் தலைப்பட்டு ஈனநிலையடைந்து இடர்ப்படுகின்றோம்; ஆனால் அப்பா என் கண்ணே, உனக்கு வந்து வாய்க்கவிருக்கும் இந்த உத்தம கன்னிகை அப்படிப்பட்டவளல்லள்; ஆனதால் எங்கள் அருமை மகனே, உன்னைப் பாடுபட்டுப் பெற்றவளாகிய என் சொல்லைத் தட்டாது, உங்கள் அப்பரை மனம் வருந்த வைக்காது, உன் தங்கையைக் கவலைப்படவிடாது, அந்த உத்தம கன்னிகையைத் தீராக் கவலைக்கு ஆளாக்காது, நான் சொல்லுகிறபடி எங்கள் புவனேசுவரியை மணஞ் செய்வதற்கு உடன்படடா கண்ணே" என்று கண்களில் நீர் ததும்ப, ஆவேசத்துடன் சொல்லி முடித்தாள்; இந்த இதோபதேசத்தை யெல்லாங் கேட்ட மாத்திரத்தே "ஆம், அம்மா, அப்படியே செய்கிறேன் நீங்கள் கவலைப்படவேண்டாம்" என்றான் மகன்; "எங்கள் குடி ஈடேறியது" என்றாள் ஈன்றாள்.

(வரும்)

## நவராத்திரிப் பூசை

நாளைத்தினம் (30-9-43) நவராத்திரிப்பூசை ஆரம்பமாகின்றது, வருகிற வியாழக்கிழமை (7-10-43) மகா நவமி பூசை நடைபெறும், எனவே இவ்வாண்டில் எட்டுநாள் நவராத்திரி பூசையும் 9ம் நாள் விஜயதசமி (மானம்பூ) உற்சவமும் நிகழும்.

இந்த நவராத்திரி புண்ணியகாலத்தில், சைவ நன்மக்களனைவரும் ஆசார சீலராய்ப் பத்தி சிரத்தையோடு இறைவியைப் பூசித்துத் தோத்திரஞ்செய்து வழிபடுவரேல் இக்காலத்தில் நேர்ந்துள்ள பல தீமைகள் குன்றுமெனலாம். நவராத்திரி விரதம் அநுட்டித்தல் உத்தமமாகும்; இப்புண்ணிய காலத்தில் அபிராமியந்தாதி முதலிய, தேவிக்குரிய தோத்திரப் பிரபந்தங்களை அநுதினமும் பாராயணஞ் செய்தலால நன்மையுண்டாம்.

## கடிதம்

இந்துசாதனப்பத்திராதிபாவர்கட்கு:

ஐயா,

பண்ணை ஆயத்தில் சென்ற காலத்தில் நிகழ்ந்த குறைகள் நீங்குமென்று கருதி பண்ணை ஆய ஐக்கிய சங்க நிர்வாகத்தில் ஆயம் ஒப்படைக்கப்பட்டும் இன்றும் ஒழுக்காக ஆயம் நடைபெறுவதாகக் காணப்படவில்லை, நிர்வாகசபையில் சில செல்வாக்குள்ளவர்கள் நுழைந்ததால், அவர்கள் கட்சியினர் தாம் நினைத்தபடி ஆயத்தை நடாத்துகிறார்களன்றி பொதுமக்களின் குறைகள் கவனிக்கப்படுவதில்லை, இந்தச் சங்கத்திலுள்ள குறைகளைப் பொதுக்கூட்டத்தில் ஆராய்வதற்குப் பலர் பலமுறை எழுத்து மூலம் காரியதரிசியைக் கேட்டும் காரியதரிசி பொதுக்கூட்டத்தைக் கூட்டவில்லை. பொதுமக்களிடம் அறவிடப்பட்ட பங்குப் பணத்திலிருந்து சங்கத்துக்குத் தொடர்பிலலாத ஒரு வழக்குக்குங் காசு ஒதுக்கியிருக்கிறார்கள். இவைபோன்ற பல விஷயங்களில் பொதுக்கூட்டத்தின் எண்ணம் கவனிக்கப்படவில்லை. ஆதலின் மேற்படி சங்க அங்கத்தவரும், இதில் அபிமான முடையோரும் இச்சங்கத்திலுள்ள குறைகளை நீக்க முயற்சி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்
க. சாந்தலிங்கர்.


# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஞ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 5.8—31.12.43)

## தேவை

கல்வியங்காடு ஐக்கிய பண்டகசாலைக்கு ஓர் மானேச்சர் தேவை. ஒரு விற்பனவு காரனை அவரே தெரிய வேண்டும். ரூபாய் 500 ரொக்கப்பிணை. வங்கி வட்டி கொடுபடும். இருவருக்கும் மாசச்சம்பளம் ரூபா 60. 2.10.43 காலை 12 மணிவரை காரியதரிசிபால் விண்ணப்பம் ஏற்கப்படும். பிரவேசப்பணம் ரூபா 10. தெரிபடாவிடில் திருப்பிக் கொடுக்கப்படும்.

S. ThambaPillai,
Hony. Treasurer.

கல்வியங்காடு, 26—9—43
Mis 128—27-9.43 30.9.43

## தேவை

## THAVADY CO-OPERATIVE STORES SOCIETY Ltd.

தாவடி ஐக்கிய பண்டகசாலைக்கு மானேஜர் ஒருவர் தேவை. வியாபார அநுபவமும் கணக்கு வல்லபமும் ஆங்கில அறிவும் விசேடமாகக் கவனிக்கப்படும். ரொக்கப் பிணை ரூ. 500. மாதச் சம்பளம் ரூ. 30.

நன்னடத்தைப் பத்திரங்களுடன் விண்ணப்பத்தில் தம்முடைய வயதையும், அநுபவங்களையும் குறிக்கவேண்டும்.

விரும்பினோர் ஒக்டோபர்௴ 15ந் திகதிக்கு முன் விண்ணப்பஞ் செய்க.

S. SINNATAMBY,
Hon. Secretary,
Thavady Co-operative Stores Society Ltd.,
Thavady, Kokuvil Post.
(Mis. 120. 30-9.43)


## வடஇலங்கை முத்தமிழ் மன்றம்

இம்மன்றத்திற்குக் காரியாதிகாரிகளை நியமிக்கவும் பிரமாணங்களை நிச்சயிக்கவும் வண்ணை கலாநிலைய மண்டபத்தில் 1-10-43 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஓர் மகாசபை கூட்டப்படும்.

முத்தமிழ்மன்ற ஆரம்பவிழா 3-10-43 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில கொண்டாடப்படும். அத்தருணம் முத்தமிழ் மன்றப் போஷகரும் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியருமான உயர் திரு. சுவாமி விபுலானந்தர் அவர்கள் "முத்தமிழ்" என்னும் பொருள் பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றுவர். அதனையின் இசைநாடக நிகழ்ச்சிகள் நடைபெறுமென முத்தமிழ்மன்ற நிர்வாக காரியதரிசி திரு. ச. ஸ்ரீநிவாசன் அறிவிக்கின்றார்.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

## வெள்ளி ஒக்டோபர் 1

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 நந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இ எம் அப்துர் ரஹ்மான் பாட்டு 9 முடிவு.

1கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 இ எம் அப்துர் ரஹ்மான் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 காஞ்சீபுரம் டி ராமதிலகம் பாட்டு 5-40 தூரான்-ஷரீப் 6 திருப்பாம்புரம் என் சோமசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இத்-உல்-பிதர் 7-25 துதிப்பாடல்கள் † 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 முன்னேற்றம் 8 திருப்பாம்புரம் என் சோமசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 8-45 காஞ்சீபுரம் டி ராமதிலகம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலகவிவகாரங்கள் (ஆங்கிலம்) 10 திரைகானம் † 10 20 மாதுர்† 10-30 முடிவு.

## சனி அக்டோபர் 2

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இருவர் இசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பி ஆர் ராமச்சந்திர ராவ் வயலின் 9 முடிவு.

1 டி சுந்தரி பாட்டு 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 பழைய மெட்டுகள்† 2 தமிழில்செய்திகள் 2-05 பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 2-30 முடிவு.

மாலை 5 டி சுந்தரி பாட்டு 5-40 திருவாய்மொழி விளக்கம் 6 டாக்கி இசை † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7—45 மதராஸிலுள்ளபடி அறிவிக்கப்படும் 9-15 கே ஸி டே † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகம் பல்லவி 10 திருச்சி வாத்யகோஷ்டி 10-30 முடிவு.

## ஞாயிறு ஒக் 3

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 ஆலத்தூர் சகோதரர்கள் † 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8—30 தேசமங்கலம் வெங்கடேஸ்வரய்யர் வீணை 9 முடிவு.

12 திரை இசை† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் சுப்பிரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக் கதம்பம் † 2.30 முடிவு.

மாலை 5 தேசமங்கலம் வெங்கடேஸ்வரய்யர் வீணை 5-40 தேவாராதனை 6 ஆர் சுப்ரமணியம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இவையின்றி அதிர்ஷ்டம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எங்கள் தபால்பெட்டி 8 கே ஸி தியாகராசன் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-15 ராஜகுமாரி † 9.20 ஆங்கிலத்தல் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தில்ருபா, ஸிதார் 10 டி கே பட்டம்மாள் † 10-30 முடிவு.

## திங்கள் ஒக் 4

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 நந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் துருஸ்வாமி பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2—05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எஸ் துருஸ்வாமி பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 அடைக்கலம் புதுதவன் சிறுகதை 8 முடிகொண்டான் வெங்கடராமய்யர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இரு குழலிசை 10-05 டெல்லி 2ல் உள்ளபடி கதம்பநிகழ்ச்சி† 10-30 முடிவு.

## மகிடாசுர சம்மாரம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ளுள். அவ்வளவில் யுத்த முயற்சியும் ஒழிந்தது. பசிய திருமேனியையுடைய ஈசுவரியின் அவதாரமாக எழுந்தருளிய துர்க்காதேவியின் திருவடி தீண்டப்பெற்ற பெருமையால் அவ்வசுரனிடத்துத் தறுகண்மை யெல்லாம் நீங்க அவன் பழைய நல்லறிவுவரப் பெற்றான். அதனால் இறைவியைக் குறித்துப் பின்வருமாறு தோத்திரஞ் செய்வானாயினன்:-

ஒரெட் டிதழ்வட்டத் துள்ளாய
சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப்
பராபரையே
வாரிப்படுசஞ் சமுதாக்கும் வால்
வளைக்கை
வேரிக் கரும்பேனித் தின்றிவினை
மூலமே

ஆதியா யத்தத்தி னந்தமாய்
நின்றோய்க்குப்
பாதியா யொன்றாய்ப் பலவாகிப்
பல்லுயிராய்ப்
பேதியா நின்றாய் பெருமாட்டி
நின்பெருமை
சோதியா நின்றார்க் கெளிதன்றே
தூல்லவமே.

தோன்று சராசரங்க ளெல்லாக்
தொடர்விடா
தேன்ற சிவமயமு நின்னன்றி
யில்லையா
லான்ற விருப்பி னருந்துவன
வின்றாமே
லூன்று சுகவுளவோ ஈந்தா
வொளி விளக்கே.

மூச்செயலுங் காட்டி யவைபுரக்கு
மூவரைத்த
னிச்சையிற் காட்டி யவருளத்து
மெட்டாயாற்
பச்சை யிளங்குதலைக் கிள்ளாய்
பரையேநின்
விச்சையிவை யென்றால் விடுத்
துணர வல்லாரார்.

பேதாதி பேதம் பிறந்த வுயிர்த்
தொகைக்கோ
ராதாரமாகி யளவை யறிந்தளித்தா
யோதா மறைநூ லுபதிடதத்
துண்மயமாம்
பாதார விந்தம் பெறப்பெற்றேன்
பாதகனே.

இவ்வாறு செய்த தோத்திரங்களால் மகிழ்வடைந்த அன்னை அவனிடத்துப் பூரண கிருபை பாலித்து சிவகணங்களோடிருந்து சிவபெருமானைச் சேவிக்கும் பேற்றையுமருளினள். அப்பால் சிவபூஜா பலத்தினால் தங்கள் மனோ பீஷ்டங்களெல்லாம் நிறைவேறப்பெற்ற அரிபிரமேந்திராதி தேவர்கள் தொன்மைபோலத் தத்தம் பதவிகளை யெய்தி வாழ்ந்திருந்தனர்.

(இவ்வரலாறு உபதேசகாண்டத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதியது) ——

## ஸ்ரீகுமர குருபர சுவாமிகள்

3ம் பக்கத் தொடர்ச்சி

போது அவற்றை உயர்வாகச் சிறப்பிக்கும் அம்முனிவர் தியாகப்பெருமானைச் சொல்லுகையில,

"என் னுயிர்க் கொக்கு மிளஞ்
சேயோ டேழுல கீன்றவனை
மன் னுயிர்க் கொக்குங் கமலைப்
பிரான்"

என்கின்றார்.

இங்கே பிறதெய்வத்தைப் புகழும்போதும் "என் னுயிர்க் கொக்கு மிளஞ்சேய்" என முருகப்பிரானைப் பாராட்டுமிதனால், அக்கடவுளை இவர் மறப்பினும, இவர் ஈர மறவா தென்பதை நாம் கண்குணர்ந்து கொளளலாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு 1 மருதப்பிள்ளை கதிரவேலுவும் 2 பெண் தையல்நாயகியும்,

வழக்காளிகள்

எதிராக

இல. 352

வண்ணார்பண்ணை கிழக்கு 1 கார்த்திகேசு சண்முகம் இராசசிங்கம் தானாகவும்தனதுபெண்காலஞ்சென்ற செல்லமுத்துவின் பிரதிகாரியஸ்தராகவும்

வண்ணார்பண்ணை கிழக்கு 2 சங்கரப்பிள்ளை நடராசா, எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 352.ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1943.ம் ஆண்டு ஐப்பசிமீ (அக்டோபர்) 9-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 8250.ம் இதற்கு 4-12.42 ந் திகதி தொடக்கம் 19-1-43 திகதி வரைக்கும் 100.க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100.க்கு9 வீதவட்டியும் இதில்ரூபா150 இறுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை குஞ்சிநாகன் வளவும், பெரியான்நாகன் வளவும், செட்டிதாழ்வும் நிலைப்பரப்பு ஏழு (7ம்) குளி 2-ம் கிணறும், கல்வீடுகளும், மற்றும்

## அறிவித்தல்

சிதம்பரம் அம்பலவாணசுவாமி செவ்வாய்க்கிழமை மடபரிபாலனசபையின் (மேற்பார்வையிலுள்ள) காணிகள் பல, மட்டுவில், கோப்பாய், நீர்வேலி என்ற கிராமங்களில் குத்தகை கொடுபடாமல் இருக்கின்றன. அவற்றைச் செய்கிறவர்கள், அவைகளுக்குரிய குத்தகை உறுதிகளை ஐப்பசி 5ந் தேதிக்குள் எழுதிப் போடவேண்டும். இல்லாவிட்டால் செய்கையை விடவேண்டும், வேறு யாருக்கேனும் குத்தகை கொடுக்கப்படும்.

இங்ஙனம்
இ. இராமலிங்கம்
ஷெ சபை மனேசர்.

Mis 129 30-9-43.

---

செப்பயிர் வான்பயிர்களும் [இது 1923.ம் ஆண்டு மாசி மாதம் 12-ம்திகதி உலாந்தா மேஸ்தர் எம். செல்லத்துரையால் 19123.ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் முதலாம் துண்டு] எல்லை கிழக்கு றெயில் றோட்டு வடக்கு வயிரவன் கணபதியின் ஆதனம், மேற்கு சுப்பிரமணியர் முத்தையா பெண் காலஞ்சென்ற இராசம்மாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும், வயித்திலிங்கம் பெண் செல்லம்மாவிற்குமுரிய ஆதனங்கள், தெற்கு குமாரவேலுப்பிள்ளை பெண் கண்ணம்மாவுக்குரிய ஆதனம். இதடங்கலும், முற்பதிவு D 1/40 8/8.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer.

தெல்லிப்பழை
3—9—43

Mis 119—9.9-43&30.9.43


# புதிதாகவந்துள்ளதினிசுகள்

அச்சிட்ட பருத்தி வொயில் சேலைகள்
சேலம், கோயம்புத்தூர்ச் சேலைகள்

சகலவிதமான சந்தர்ப்பங்களுக்கும் தகுதி வாய்ந்தது.

கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில்

பெனரிஸ்சேலைகள், பட்டுகள், ரிஸ்யூக்கள்,
பங்களூர், காஷ்மீரச் சுத்தமான பட்டுச்சேலைகள்.

ஓரளவு ஸ்டாக்குகளே இருக்கின்றன.
...விரைவில் வாங்கிக்கொள்ளுங்கள்...

யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்கம்பனி.

(Mis. 124, 30-9-43—7,14-10-43)

# அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காந்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், பித்தம், நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளாயகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)

---

குறைந்த விலையில் **துணிகள்** ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 30, September, 1943